**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

## OS.No.40/2021 - DW-1

| | |
|---|---|
| Name | திரு.முனுசாமி |
| Father Name | திரு.லேட்.சின்னகண்ணு |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **24.11.2025**.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனக்கு தற்போது 79 வயது ஆகும். பொன்னம்மாள் என் மூத்த சகோதரி ஆவார். கிருஷ்ணன் என்பவர் என் அக்காவின் கணவர். அவர் என் தாய்மாமன் என்றால் சரிதான். கிருஷ்ணன் அவரது அக்கா மகளை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். கிருஷ்ணன்-பொன்னம்மாள் ஆகிய இருவருக்கும் பிறந்தவர் மாரிமுத்து என்றால் சரிதான். என் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்று என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வாய்மொழியாக எப்போது பாகப்பிரிவினை நடந்தது என்றால் 1996-ம் ஆண்டு நடந்தது. யார் முன்னிலையில் நடந்தது என்றால் நாங்கள் அண்ணன் தம்பிகள் மட்டும் இருந்து வாய்மொழியாக பிரித்து கொண்டோம். வாய்மொழியாக பாகப்பிரிவினை நடந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான பட்டா கூட்டாக தான் இதுவரை இருந்து வருகிறது என்பதால் பாகப்பிரிவினை நடந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் பெயரிலும், என் தம்பி சேட்டு மற்றும் என் அண்ணன் சுப்பிரமணியன் பெயரிலும் ஒரு கூட்டு பட்டாவும், சுப்பிரமணியனின் மகன்கள் தனவேல் மற்றும் ஜானகிராமன் ஆகியோர் பெயர்களில் ஒரு கூட்டு பட்டாவும் உள்ளது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின் படி கிருஷ்ணனும், சின்னகண்ணுவும் சேர்ந்து சர்வே எண்.675/1 சொத்தை 1947-ல் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். 1960-ம் ஆண்டு கிருஷ்ணன் என்பவர் அதே சர்வே எண்.675/1-ல் மீதமுள்ள 2 ஏக்கர் 87 சென்ட் நிலத்தை வாங்கினார் என்றால் 1955-லேயே கிருஷ்ணன் என்பவர் இறந்துவிட்டார். பொன்னம்மாள் என்பவர் வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தின் படி புல எண்.675/2-ல் உள்ள சொத்தை 1968-ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் என் அப்பா தான் வாங்கி கொடுத்தார். சின்னக்கண்ணு 01.01.1995-ல் இறந்தார். பாக்கியம்மாள் 03.12.1994-ல் இறந்தார். பொன்னம்மாளுக்கும், அவரது வாரிசுகளுக்கும் எந்த சொத்து எப்போது பிரிக்கப்பட்டது என்றால் அவர்களுக்கு நான் சொத்து எதுவும் பிரித்து கொடுக்கவில்லை. அந்த சொத்தை நானும், என் தம்பி சேட்டு மற்றும் அண்ணன் சுப்பிரமணி வைத்துள்ளோம். கிருஷ்ணனும், சின்னக்கண்ணும் கிரையம் வாங்கிய சொத்தில் பாகம் கொடுக்கப்பட்டதா என்றால் அவர்கள்

வாங்கிய கடனை நானும், என் அண்ணனும் பைசல் செய்ததால் அவர்களுக்கு பாகம் கொடுக்கவில்லை. குண்டலேரியிலுள்ள ஒரு முதலியாரிடம் அவர்கள் வாங்கிய கடனை பைசல் செய்தோம். அவருடைய பெயர் தெரியாது. எவ்வளவு தொகை பைசல் செய்தோம் என்பது என் அண்ணன் சுப்பிரமணிக்கு தான் தெரியும். கடன் தொகை ரூ.500/-ஐ வட்டியோடு சேர்த்துக் கொடுத்தோம். நான் சொல்வது போல் கிருஷ்ணனும், சின்னக்கண்ணுவும் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் நாங்கள் கடன் பைசல் செய்ததாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. கிருஷ்ணனின் மகன் மாரிமுத்துவும் கூட்டு நிலங்களில் சில நிலங்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் தவறு. அவர் விவசாயம் செய்து கொண்டிருந்த போது நான் அவரை அடித்ததாக போலிசாரிடம் புகார் கொடுத்தாரா என்றால் பொய்யான புகார் கொடுத்தார். அவரை விவசாயம் செய்யவிடாமல் நான் தடுத்ததால் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மருதமங்கலம் கிராமத்திலுள்ள வழக்கு F அட்டவணை சொத்துகள் கிருஷ்ணன் பெயரில் உள்ள சொத்துகள் என்றால் சரியல்ல. மருதமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்துகளில் எனக்கு பங்கு இல்லையா என்றால் என் அப்பா பெயரில் இருப்பதால் எனக்கும் பங்கு உள்ளது. வழக்கு A அட்டவணை சொத்துகள் சின்னக்கண்ணு பெயரிலும் F அட்டவணை சொத்துகள் கிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் தவறு. 2012-ம் ஆண்டு என் அண்ணன் சுப்பிரமணியன் அவரது மகன் தனவேலுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்து என சுப்பிரமணியன் சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். நானும், என் தம்பி சேட்டும் அந்த சொத்தை என் அண்ணன் சுப்பிரமணியனுக்கு கொடுத்தோம். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. வழக்கு F அட்டவணை சொத்துகளை மாரிமுத்து வரி செலுத்தி தனிப்பட்ட முறையில் அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் தவறு. என் மனைவியின் பெயர் அஞ்சலட்சுமி. என் மனைவியின் பெயரில் சுப்பிரமணியனின் பிள்ளைகள் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் அந்த கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.39 என் மனைவிக்கு நான் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் பங்கு சொத்தை எழுதிவைத்துள்ளேன்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.11.24 16:52:09 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.